இயக்க முடியாததற்கு காரணம் அந்த வழித்தடங்களிலே பாதைகள் சரியில்லாமல் இருக்கின்றன. மற்ற பேருந்துகள் இயக்கியாகிவிட்டன. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் டீசல் தட்டுப்பாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே நிறுத்திய பேருந்துகள் அத்தனையையும் இயக்கியாக வேண்டும் என்று உத்தரவு வழங்கியதன் வாயிலாக இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல அந்தப் பாதைகள் சரியாக இருக்குமானால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து பேருந்துகள் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 426, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

***426--***

**மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் குட்டை அமைத்தல்.**

**9321*–**செல்வி எல். சுலோசனா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மேட்டுப்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திலுள்ள கோவனூர் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம், நாயக்கன்பாளையம் கிராமம், எண் 389-ல் கோவனூர் அருகே ஒரு புதிய கசிவுநீர்க் குட்டை அமைப்பதற்காக திட்ட மதிப்பீடு ரூ. 7.31 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தல அலுவலருக்கு அதாவது ஸ்பாட் ஆபீசர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதல் பெற்று எதிர்காலத்தில் இதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி எல். சுலோசனா:** தலைவர் அவர்களே, கோவனூர் பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறைந்து வறட்சி மாவட்டமாக மாறக்கூடிய சூழ்நிலை

உள்ளதாகப் புள்ளிவிவரம் மூலம் தெரிய வருகிறது. எனவே மேற்கு தொடர்ச்சி மலையான பாலமலை அடிவாரத்தில் கோவனூர் அமைந்துள்ளது. மழைநீர் வீணாவதைத் தடுத்து அந்த அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைத்தால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும். பாலமலை பகுதியில் வாழ்கின்ற ஆதிவாசிகளும் விவசாயக் கூலி செய்து வாழ்பவர்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எனவே இப்பணியைத் துரிதமாக நடைமுறைப்படுத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு மேற்படி குட்டையை அமைக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோவனூர் அண்ணன் தம்பி பள்ளத்தில் குட்டை அமைப்பதற்கு 1 கோடியே 5 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டு, பயன் விகிதாச்சாரம் அதற்கு குறைவாக இருந்தபடியால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுத்தான் இப்போது நாயக்கன்பாளையம் கிராமத்திலே ஒரு கசிவுநீர் குட்டை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய விகிதாச்சாரம்கூட குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் கூட பழங்குடியினர் பயன் அடைகிறார்கள் என்ற காரணத்திற்காக இத்திட்டத்தைச் சுற்றி 47 கிணறுகள் இருக்கின்ற காரணத்தினாலே, அந்த கிணறுகளுக்கும் ஊற்று கிடைக்கும் என்ற காரணத்திற்காகத்தான் இதை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல மாவட்ட ஆட்சியருடைய ஒத்திசைவிற்காக அனுப்பப்பட்டிருக்கிறது. ஸ்பாட் ஆபீசருடைய சில இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கவர்ன்மெண்டிலிருந்து பெறவேண்டியிருக்கிறது. அதற்காகவும், சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவும் அனுப்பியிருக்கிறோம். ஆகவே உறுப்பினர் கேட்டிருக்கின்ற கோவனூர் அண்ணன் தம்பி பள்ளத்திலே 1 கோடியே 5 லட்சத்திலே குட்டை அமைக்கின்ற பணி எடுத்துக்கொள்ள இயலாது. இந்தத் திட்டத்தைத்தான் அரசு பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் மேற்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தின் கீழே செயல்படுத்தலாம் என்று நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். அதையும் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 427, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.